# Principal District Munsif Court, Sankarankovil.

தேதி : 15.10.2024

அ.வ.எண்.199/2017

வா.சா.1 - காந்திமதி

<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீடு சங்குபுரம் 3 வது தெருவில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீட்டின் முன்வாசல் சங்குபுரம் 3 வது தெருவைப் பார்த்து அமைந்துள்ளது என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய வீட்டைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்டியுள்ளேன். என் வீட்டின் பின்புறமாக வரக்கூடாது என்று 1ம் பிரதிவாதி சொல்வதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் குடியிருக்கும் வீட்டின் மனையை கண்ணன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். என்னுடைய வீட்டின் பின்புறம் காம்பவுண்டு சுவர் வரையில்தான் கண்ணனுக்கு மனை இருந்தது என்றால் சரிதான். என்னுடைய வீட்டின் பின்புற காம்பவுண்டு சுவருக்கு அடுத்த பின்புறம் உள்ள மனை சொக்கலிங்கம் பண்டாரம் குமாரர் வீராச்சாமி பண்டாரம் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அவரிடமிருந்து அச்சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் சரிதான். நான் வீடு கட்டியுள்ள இடம் சர்வே எண்.149/2A , 2 B யில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு பின்புறம் உள்ள மனை சர்வே எண்.149/1 ல் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு பின்புறம் நகராட்சி ரோடு உள்ளது. அதில் நான் இறங்கக்கூடாது என பிரதிவாதி தகராறு செய்கிறார். என்னுடைய வீட்டிலிருந்து வெளியே செல்வதற்கு சங்குபுரம் 3 வது தெரு என்று குறிப்பிட்டு தான் நான் சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு பின்புறம் தெரு உள்ளது என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என் வீட்டிலிருந்து சங்குபுரம் 4 வது தெருவிற்கு சென்றுவர உரிமை உள்ளது என விளம்புகை செய்யக்கோரி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் தெரு என்பது 1ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதால் தான் அவருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சங்கரன்கோவில் நகராட்சியை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் கணவன் மனைவி என்றால் சரிதான். என் வீட்டிற்கு பின்புறம் உள்ள எதிர்கோரிக்கை 2ம் தபசில் சொத்து பிரதிவாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட பாதை என்றும், அதை அனுபவிப்பதை இடையூ செய்யக்கூடாது என பிரதிவாதிகள் எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் என்னுடைய வீட்டுமனையை கிரையம் வாங்குவதற்கு முன்பு 1ம் பிரதிவாதி சர்வே எண்.149/1ல் மனையை கிரையம் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். வீராச்சாமி பண்டாரம் சர்வே எண்.149/1ல் உள்ள மனையை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு அந்த மனைக்கு

தென்புறத்தில் 2 செண்ட் இடத்தை பாதையாக ஒதுக்கி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கண்ணன் என்பவர் எனக்கு சொத்தை கிரையம் கொடுத்தபோது அந்த சொத்துக்கு பின்புறத்தில் சர்வே எண்.149/1ல் எனக்கு பாதை எதுவும் ஒதுக்கி கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீட்டிற்கு கீழ்புறமும், மேல்புறமும் சாரதா குமாரி, சொர்ணம், முனியலெட்சுமி, கோவிந்தம்மாள் ஆகியோர் வீடு உள்ளது என்றால் மேற்சொன்ன நபர்கள் முன்காலத்தில் குடியிருந்து வந்தார்கள். தற்போது சந்திரசேகர், சண்முகநாதன் ஆகியோரின் வீடுகள் உள்ளது. நான் சொல்லும் சந்திரசேகர், சண்முகநாதன் ஆகியோர், மேற்சொன்ன சாரதா குமாரி, சொர்ணம், முனியலெட்சுமி, கோவிந்தம்மாள் ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்றவர்கள் என்றால் சரிதான். வீராச்சாமி பண்டாரம் மேற்சொன்ன  சாரதா குமாரி, சொர்ணம், முனியலெட்சுமி, கோவிந்தம்மாள் ஆகியோர்களுக்கு மனையை கிரையம் கொடுக்கும்போது தென்புறம் உள்ள 2 செண்ட்டை பாதையாக ஒதுக்கி கிரையம் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2 செண்ட்டில் அமைந்துள்ள பாதையில் மேற்சொன்ன சாரதா குமாரி, சொர்ணம், முனியலெட்சுமி, கோவிந்தம்மாள் ஆகியோர்களுக்கு பாத்தியம் உள்ளது என்றாலும், அவர்களும் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றாலும் சரியல்ல.  2 செண்ட்டில் அமைந்துள்ள பாதையானது தென்வடல் 3 அடி, கிழமேல் 290 அடி அமைந்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன தென்வடல் 3 அடி அகலம் உள்ள பாதைக்கு அ டுத்த வடபுறம் உள்ள நபர்கள் தங்களுடைய இடத்தில் தென்வடலாக 13 அடி அகல இடத்தை பாதைக்காக ஒதுக்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நானும் என்னுடைய வீட்டிற்கு பின்புறம் 2 அடி அகலத்திற்கு இடம் விட்டுள்ளேன். என்னுடைய வீட்டின் பின்புறம் உள்ள காம்பவுண்டு சுவருக்கு வடபுறம் வாறுகால் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த வாறுகால் என்னுடைய காம்பவுண்டு சுவரை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். வாறுகால் கட்டக்கூடாது என ஆட்சேபணை செய்தேன். ஆனால் யாரும் அதனை கேட்கவில்லை. என்னுடைய வீட்டின் பின்புறம் உள்ள காம்பவுண்டு சுவரில் 2 அடி அகலத்தில் வாசல் வைத்துள்ளேன். படிக்கட்டு எதுவும் கட்டவில்லை. என்னுடைய காம்பவுண்டு சுவருக்கு வடபுறம் உள்ள வாறுகாலுக்கும், காம்பவுண்டு சுவரில் நான் வைத்துள்ள வாசலுக்கும்  இடையில் 3 அடி உயரம் இருக்கும் என்றால் சரிதான். என்னுடைய காம்பவுண்டு சுவரில் வைத்துள்ள வாசலில் இருந்து வடபுறம் உள்ள தெருவிற்கு வரவேண்டும் என்றால் என்னுடைய வாசலில் இருந்து 5 அடி அகலத்தில் படிக்கட்டு கட்டினால்தான் வரமுடியும் என்றால் சரியல்ல. வாறுகால் 3 அடி அகலம் இருக்கும் என்றால் சரியல்ல, 1 ½ அடி இருக்கும். வாறுகால் 3 அடி அகலத்தில் உள்ளது என்றாலும், தற்போது நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாறுகால் அமைந்துள்ள 3 அடி அகலம் இடம் போக அதற்கு வடபுறம் உள்ள தென்வடல் 13 அடி உள்ள இடம் பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட இடம் என்றால் சரியல்ல. என்னுடைய இரண்டு அடியில் தான் வாறுகால் கட்டியுள்ளார்கள். என்னுடைய மகன் வெளியூரில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். அவர் எங்கள் வீட்டிற்கு வரும்போது காரை எனது வீட்டிற்கு வடபுறம் நிறுத்துவார் என்றால் சரியல்ல. சங்குபுரம் 4 வது தெரு என்பது தென்வடல் ஓடைக்கும் கீழ்புறம் உள்ளது என்றால் சரிதான். சங்குபுரம் 4 வது தெரு ஓடைக்கு கீழ்புறம் அமைந்துள்ளது என்பது நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும்

என்பதால் நான் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு சங்குபுரம் 3 வது தெரு தான் பிரதான வழி என்றாலும், அதற்கு முரணாக சட்டத்திற்கு புறம்பாக சங்குபுரம் 4 வது தெருவில் நான் அத்துமீறி படிக்கட்டு கட்டவும், என்னுடைய காரை நிறுத்தவும் முயன்றதால் பிரதிவாதிகள் எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சங்கரன்கோவில் நகராட்சியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தால் சங்குபுரம் 4 வது தெரு ஓடைக்கு கீழ்புறம் அமைந்துள்ள விபரம் தெரிந்துவிடும் என்பதால் நான் நகராட்சியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட பாதையில் நான் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால் பிரதிவாதிகள் எதிர்கோரிக்கையில் கோரியுள்ள பரிகாரம் பிரதிவாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.